# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 18 இதழ் - 3 மார்ச் - 2005



வெளியிடுவோர்

கிறிஸ்துவின் சபை


தாராபுரம் ரோடு, காங்கயம்-638 701. தமிழ்நாடு, இந்தியா

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382

E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. ஆராதனைகென்று நாம் ஏன் கூடி வருகிறோம் ........ 10
3. பெண்கள் பகுதி ........ 15
4. வாலிபர் பகுதி ........ 19
5. சிறுவர் பகுதி ........ 22
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 25
7. நீதிமானுக்கு வரும் துன்பங்கள் ........ 31

THIRUMARAI AASAAN
Published by Church of Christ
S. Rajanayagam
Editor
J.C. Choate
Honorary Editor
Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
Pleading for the restoration of pure New Testament Christianity
Vol. 18 March - 2005 Issue - 3

ஆசிரியர் உரை

# இயேசு சிலுவைக்குப் போக மறுத்திருந்தால் ...

இப்பூமியின் வாழ்க்கையில் எல்லோரையும் பொதுவாகப் பாதிக்கின்ற அம்சங்களில் ஒன்று மேன்மை பாராட்டல். ஏதாவது ஒரு காரணத்தினிமித்தமாக கிட்டத்தட்ட எல்லோருடைய வாழ்க்கையிலும் இது ஏதாவது ஒரு கட்டத்தில் நடந்து விடும். இந்த மேன்மை பாராட்டல் பெரும்பாலும் ஒப்பிடுதலை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கும். ஒன்றோடு மற்றொன்றை ஒப்பிட்டு, ஒன்றைக் காட்டிலும் மற்றொன்று பெரியதாக, சிறந்ததாக, உயர்ந்ததாக, நல்லதாக, மதிப்பானதாக இருக்கும் போது, இந்த மேன்மை பாராட்டல் சத்தமில்லாமல் உள்ளே நுழைந்துவிடும். நான் என் வாழ்க்கையில் எதைக் குறித்தும் எப்போதும் மேன்மை பாராட்டினதே இல்லையென்று பச்சைப் பொய்யர்களைத் தவிர யாருமே சொல்ல முடியாது என்று நம்புகிறேன். மேன்மை பாராட்டுதல் பல நேரங்களில் ஓர் அத்துக்குள் இருக்கும், சில நேரங்களில் அத்துமீறியும் போய்விடுவதுண்டு. நான் சொல்வது ஓரளவுக்காகிலும் சரிதானே!

இப்படி, ஒப்பிடுதலை அடிப்படையாகக் கொண்ட மேன்மை பாராட்டலுக்குக் காரணமாக பல காரியங்கள் இருக்க முடியும். ஒருவேளை, அது, ஒருவன் கற்றிருக்கும் கல்வியாகவோ, பெற்றிருக்கும் வேலை வாய்ப்பாகவோ, செய்யும் தொழிலாகவோ, கிடைக்கும் வருமானமாகவோ, சார்ந்திருக்கும் குடும்ப கௌரவமாகவோ சமுதாயமாகவோ, சேர்த்திருக்கும் செல்வமாகவோ, அது தரும் செல்வாக்காகவோ, அடைந்திருக்கும் அந்தஸ்தாகவோ, கொண்டிருக்கும் அழகாகவோ, இன்னும் சில நேரங்களில் ஆன்மீக வாழ்வில் எட்டியிருக்கும் நிலையாகவோ கூட இருக்கும். ஆனால், ஒருவன் எதைக் குறித்து மேன்மைப் பாராட்டுகிறான் என்பதை வைத்து, அவன் யார் என்றும், அவன் தன்மை எப்படிப்பட்டதென்றும், ஆன்மீக வாழ்வில் அவன் முதிர்ச்சி எந்தளவு உள்ளதென்றும், நாம் ஆழம் பார்த்து

விடமுடியும். அத்தோடு, அவர்களின் உண்மையான பக்தி நிலையையும் நாம் அளவிட்டு விடமுடியும்.

சரி, இப்பொழுது, தங்கள் வாழ்க்கையில் நீதியான காரியத்தினிமித்தம் மேன்மை பாராட்டின இரண்டு தேவமனிதர்களை உங்கள் முன் கொண்டு வருகிறேன். முதலாமவன், "என் இருதயத்துக்கேற்ற தாசன்" (அப். 13:22) என்று பரலோக தேவனால் நற்சாட்சி கொடுக்கப்பட்ட வெற்றி ராஜாவாகிய தாவீது. அவனுடைய மேன்மை பாராட்டலைப் பாருங்கள். **"சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள். நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தரின் நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்"** என்கிறான் (சங். 20:7) இரண்டாமவன், புதிய ஏற்பாட்டுப் பிரபலங்களில் பிரதானமான பவுலடியார். கலாத்தியா பட்டணத்துப் பரிசுத்தவான்களுக்கு இவர் எழுதும்போது என்ன சொல்லுகிறாரென்று கவனியுங்கள். **"நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் சிலுவையைக் குறித்தே யல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டா திருப்பேனாக...."** என்கிறார் (கலா 6:14)

முதலாமவரின் மேன்மை பாராட்டலுக்குக் காரணம் **கர்த்தரின் நாமம்.** இரண்டாமவரின் மேன்மை பாராட்டலுக்குக் காரணம் கர்த்தராகிய **இயேசு கிறிஸ்துவின் சிலுவை.** சரி, இந்த இரண்டு பக்தர்களில், நாம் இரண்டாமவரைப் போல, சிலுவைக்குப் பின்னான புதிய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறபடியால், அவருடைய மேன்மை பாராட்டலுக்குக் காரணமாயிருந்த, இயேசுக் **கிறிஸ்துவின் சிலுவைக்கு** இங்கே முக்கியத்துவம் அளித்து, அதிலிருந்து என்ன கற்றுக்கொள்ள முடியுமென்று முயற்சிப்போம்.

அதற்கு முன்பாக, பவுல் தனக்கு மேன்மையாகவும், உயிராகவும், மூச்சாகவும் இருந்த இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து என்ன சொல்லியிருக்கிறார் என்பதையும் தெரிந்துகொள்வோம். கொரிந்து பட்டணத்தாருக்கு எழுதும் போது, **"சிலுவையைப் பற்றிய உபதேசம்** கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவப் பெலனாயிருக்கிறது" (1 கொரி 1:18) என்கிறார். அடுத்து, சில வசனங்கள் தள்ளி, "நாங்களோ **சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்** பிரசங்கிக்கிறோம்" என்கிறார் (1:23). அடுத்த அதிகாரத்தில் இன்னும் ஒருபடி மேலே சென்று, "இயேசு கிறிஸ்துவை, **சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி** வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்தேன்" (2:2) என்று கூறுகிறார். இவ்வசனங்களெல்லாம், **கிறிஸ்துவின் சிலுவை,** பவுலுடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி, ஊழியப் பாதையிலும் சரி, எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்துள்ளதென்பதை நமக்கு நன்றாகவே காட்டுகிறது.

இப்படிப் பவுலுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும், ஊழியப் பாதையின் ஒவ்வொரு அடியிலும் அவன் பேச்சுக்கும், செயலுக்கும்,

உரமிட்டு வந்த கிறிஸ்துவின் சிலுவை, இன்றைய கிறிஸ்தவர்களால் எப்படிப் பார்க்கப்படுகிறது என்பதைக் கவனித்தால் கண்களில் நீர்த்தாரை உண்டாகிறது. ஆம், ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்க்கை முழுவதிலும், அவனுக்குப் பரலோகத்தின் தேவனால் கூட்டிக் கொடுக்கப்படும் வருடம் முழுமையிலும், முழுமுதற் காரணமாக இருக்க வேண்டிய சிலுவை, வருடத்தில் ஒரு முறை மாத்திரம், அதுவும் ஒரு குறிப்பிட்ட மாதத்தில் மாத்திரம் பேசப்பட்டு, பிறகு மறக்கப்படும் ஒன்றாக மாறிவிட்டது. இப்படித் தேவன் சம்பந்தப்பட்ட காரியங்களை தங்கள் சௌகரியம் போல் செய்வதற்கு வேத வசனங்களின் ஆதாரம் எங்கேயிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள்!

சரி, சிலுவை மரணம் என்பது ரோமானியர்களால் உருவாக்கப்பட்ட மரண தண்டனை முறைகளுள் ஒன்று என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், உண்மையில் அவர்களுக்கு முன்பாக பெனீக்கேயர்கள் காலத்திலேயே இம்முறை வழக்கத்திலிருந்திருக்கிறது. இந்தச் சிலுவை மரணத்திற்குப் பொதுவாக, அடிமைகளையும், கொடுங்குற்றவாளிகளையும் தான் ஒப்புக் கொடுப்பது வழக்கம், ஆனால், ஒரு சில சமயங்களில், ரோமப் பிரஜைகளுக்கும் இத்தண்டனை தீர்க்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இப்படி சரித்திரத்தின் ஒரு கட்டம் வரைக்கும் சாபத்தின் அடையாளமாக இருந்த சிலுவை, இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்குப் பிறகு, தியாகச் சின்னமாக மாறிவிட்டது. ஆம், உலக சரித்திரத்தின் நடுநாயகமாக விளங்கி, மானிடம் அனைத்திற்கும் நித்திய மீட்புப் பற்றிச் சத்தமாகப் பேசும் ஒலிபெருக்கியாக மாறிவிட்டது. கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக பூச்சக்கரத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் இடைவிடாமல் பேசப்பட்டு வரும் ஒரே செய்தி சிலுவைச் செய்திதான். கொல்கொதா மலையில் சிலுவை மரத்திற்கு தேவனால் கொடுக்கப்பட்ட ஈர்ப்பு சக்தி இம்மியும் குறையாமல் இன்றளவும் அப்படியே உள்ளது. சிலுவையைக் காண்பவர் மனதிலும், அதின் செய்தியைக் கேட்பவர் நெஞ்சிலும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய அதன் வல்லமையில் கடுகளவும் மாற்றமில்லை. மொத்தத்தில் சிலுவையின் மணமும், ருசியும், மாறாமல் அப்படியே உள்ளது.

இவ்வளவு மகிமையும், மாட்சிமையும் நிறைந்த சிலுவை தேவனுடைய நித்தியத் திட்டத்தில், அநாதி காலமுதல் இருந்துள்ளது. சிலுவைக்கான சரியான காலம் கனிந்து வரும்வரை தேவன் பொறுமையோடிருந்து ஏற்ற காலத்தில் சிலுவையை வெளிப்படுத்தி அதன் செய்தியையும் அளித்தார். இது குறித்து பவுலடியார், கலாத்தியருக்குச் சொல்லும்போது, **“காலங்கள் நிறைவேறின போது...... தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்”** (கலா 4:5) என்கிறார், இன்னும், இதே தேவதாசன் தீத்துவுக்கு எழுதும்போது, **“.... கிறிஸ்து நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்”** என்கிறார் (தீத்து 2:13) தேவன்

காலங்கள் நிறைவேறினபோது, இயேசுவை **அனுப்பினார்**. ஆனால், கிறிஸ்துவோ தம்மை சிலுவைக்கு **ஒப்புக்கொடுத்தார்**. ஒப்புக்கொடுத்தல் என்ற வார்த்தை மிகச்சிறந்த, வெகு ஆழமான பொருளைக் கொண்ட ஒன்று. யாருக்கு ஒருவன் தன்னை ஒப்புக் கொடுக்கிறானோ, அவருடைய முழு விருப்பத்திற்குத் தன்னை முற்றிலுமாகக் கீழ்ப்படுத்துவதே ஒப்புக் கொடுத்தல் ஆகும். ஆக இங்கே, இயேசு ஒப்புக் கொடுத்தார் என்று சொல்லும் போது, அதன் பொருள், தேவ சித்தத்திற்கு, தன்னை **முற்றிலுமாக கீழ்ப்படிந்துள்ளார்** என்பதே. எவ்வளவு பெரிய தியாகச் செயலை அவர் செய்துள்ளார் என்று பாருங்கள்!

நாம் வாழும் இந்த நாட்கள், கீழ்ப்படியாமை கொடி கட்டிப் பறக்கும் காலம், பெற்றெடுத்த பிள்ளை பெற்றோருக்கும், படிக்கும் மாணவன் ஆசிரியருக்கும், வேலை செய்யும் தொழிலாளி முதலாளிக்கும், கட்டி வந்த மனைவி கணவனுக்கும், நாட்டின் பிரஜை தேசச் சட்டத்திற்கும் சின்னச் சின்ன காரியங்களுக்குக் கூட கீழ்ப்படிய மறுக்கும் காலம். இத்தனைக்கும் அப்படிக் கீழ்ப்படிவதால் சம்பந்தப்பட்டவர்களுக்குத்தான் அனுகூலமும் ஆதாயமும் உண்டு. அப்படியிருந்தும் கீழ்ப்படிவதில்லை. ஆனால் நம்முடைய இயேசுவோ, மரண பரியந்தம் தம்மைத் தாழ்த்தி கீழ்ப்படிந்துள்ளார். (பிலி. 2:8)

இந்நாட்களில் அவருடைய முழுமையான கீழ்ப்படிதல் மூலமும், சிலுவைப்பாடுகள் மூலமும் கிடைக்கும் நன்மையை பெரிதாகப் பேசிக்கொண்டிருக்கும் நாம், ஒருவேளை, இயேசு சிலுவைக்குப் போகாமலிருந்திருந்தால் அல்லது போக மறுத்திருந்தால் என்ன கதி ஆகியிருக்குமென்று எப்பொழுதாகிலும் எண்ணிப்பார்த்திருக்கிறீர்களா? இருப்பதற்கே நேரமில்லை, இனி இதற்கெல்லாம் எங்கே போவது என்கிறீர்களா? சரி போகட்டும், இந்தச் சமயத்தை நாம் அதற்காகப் பயன்படுத்தி, நமதாண்டவர் சிலுவைக்குப் போக மறுத்திருந்தால் என்ன ஆகியிருக்குமென்று நம்முடைய கற்பனை வளத்திற்குக் கொஞ்சம் தீனி போட்டுப்பார்ப்போம். அப்பொழுதாகிலும், நம்முடைய ஆன்மீக வாழ்வில் நமக்கு உறைக்க வேண்டிய சில காரியங்கள் உறைக்கிறதா என்று பார்ப்போம்.

## I நமக்கு இரட்சகர் கிடைத்திருக்கமாட்டார்

இயேசு சிலுவைக்குப் போக மறுத்திருந்தால், என்ன நடந்திருக்கு மென்பதிலிருந்து தெரிந்துக்கொள்ள வேண்டிய முதல் காரியம் மனுக்குலத்தின் மீட்புக்கு ஓர் இரட்சகர் கிடைத்திருக்கமாட்டார் என்பது.

நான் இப்படிச் சொல்வதால், மனுக்குலத்துக்கு ஓர் இரட்சகர், அவ்வளவு அவசியமா என்று நீங்கள் கேட்கக்கூடும். ஆயினும், **அவசியம் தான்** என்பதைத் தெரிந்து கொள்ளத் தொடர்ந்து படியுங்கள். பாவத்தின் வஞ்சனையால் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, பாவத்தின் பயங்கரத்தால் கொடுமையாகத் தாக்கப்பட்டு நிலைகுலைந்து போயிருந்த மனிதனின் பரிதாப நிலை குறித்து, பழைய ஏற்பாட்டின் இரண்டு பெரிய தீர்க்கதரிசிகள்

என்ன சொல்லுகிறார்கள் என்று பாருங்கள், "**கர்த்தாவே மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்**" (எரே 10:23) என்று எரேமியா தீர்க்கனும், "**நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள் போல இருக்கிறோம்; எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது. நாங்கள் அனைவரும் இலைகளைப் போல உதிருகிறோம்! எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டு போகிறது**" (ஏசா 64:6) என்று ஏசாயாவும் கூறுகிறார்கள், தன்னைப்படைத்த தேவனுக்கடுத்த காரியத்தில், மனிதனுடைய நிலை எவ்வளவு கேடடைந்துள்ளதென்பதை இதை விடவும் சிறப்பாகச் சொல்ல முடியாது. இத்தீர்க்கதரிசிகளின் விவரிப்பின்படி பார்க்கும்போது, மனிதக் குலத்துக்கு ஓர் இரட்சகர் ஆதிமுதலே அவசியப்பட்டிருக்கிறாரென்று நன்றாகவே தெரிகிறது.

மனிதனின் இந்த அவல நிலையைப் பரலோகத்திலிருந்து கண்ட நம் தேவன், தம்முடைய ஒரே பேரான குமாரனை பூமிக்கு அனுப்பச் சித்தங் கொண்டு, தம்முடைய தூதனைக் கொண்டு யோசேப்பினிடத்தில் இவ்விதம் சொன்னார். "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் **பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்**" என்று. (மத் 1:21) இங்கே தேவ தூதனைக் கொண்டு சொல்லப்பட்ட இதே காரியத்தைத் தான், தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபத்தில், பவுலைக் கொண்டு மீண்டும் தேவன் வலியுறுத்துகிறார். "**பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்**" என்று (1தீமோ 1:15) இன்னும், அப்போஸ்தலர் 4:12-ல் "**இயேசுவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை,** நாம் இரட்சிக்கப்படும்படிக்கு, வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே யல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றார்.

மேற்கண்ட வசனங்களெல்லாம், மனிதர்களனைவரும் சந்தேகத்திற் கிடமின்றுப் பாவிகளென்றும், அவர்களை இரட்சிக்கும்படியாக வந்தவர் தான் இயேசு என்றும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகிறது. ஆக, **இயேசு சிலுவைக்குப் போயிருக்காவிட்டால்** மனுக்குலம் இரட்சிக்கப் படுவதற்கான வழியோ, அவன் பாவத்திலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்போ கிடைத்திருக்காது. எப்படியெனில் **இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை** (எபி 9:22) ஆனால், இரத்தமோ சிலுவையில் தான் சிந்தப்படவேண்டியிருந்தது. இயேசு சிலுவைக்குப் போக மறுத்திருந்தால், இரத்தம் சிந்தப்பட்டிருக்காது. இரத்தம் சிந்தப்பட்டிருக்கா விட்டால் பாவமன்னிப்பு உண்டாயிருக்காது. பாவமன்னிப்பு இல்லையானால், இரட்சிப்பை நாம் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. இன்றைக்கு, உலகெங்கும் இலவசமாகப் பிரசங்கிக்கப்பட்டு வரும் இரட்சிப்பின் செய்தி அந்நிய காரியமாக மாறியிருக்கும்.

ஆக, அருமையானவர்களே, இயேசு சிலுவைக்குப் போனதால், உங்களுக்கு ஓர் இரட்சகர் கிடைத்திருக்கிறார் என்பதை அறிந்து, உணர்ந்து அவருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதின் மூலம் அவரை உங்களுடைய வாழ்க்கையின் இரட்சகராக்கிக் கொள்ளுங்கள்.

## II கல்லறைக்குப் பிறகு நம்பிக்கையிருந்திருக்காது

"இயேசு சிலுவைக்குப் போக மறுத்திருந்தால்" என்ன நடந்திருக்கு மென்பதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய இரண்டாவது காரியம், கல்லறைக்குப் பிறகான நம்பிக்கை மனுக்குலத்துக்கு கிடைத்திருக்காது என்பது.

மானிடத்தை ஏதேன் தோட்டத்துக் காலந்தொட்டு பயமுறுத்தி தொடர்ந்து துரத்தி வரும் மற்றுமொரு பயங்கரப் பிரச்சினை மரணமும், அது தரும் பரிசாகிய கல்லறையும் எவ்வளவு பெரிய வீரனாக, தீரனாக இருந்தாலும், மரணம் தரும் பாதிப்பையும், அதுதரும் இழப்பையும் சந்திக்கும்போது துவண்டு போய்விடுகிறான். மரணம் ஒரு மனிதனைத் தாக்கும் போது அவனுடைய கல்வியையோ, செல்வத்தையோ, பதவியையோ, பட்டங்களையோ, குடும்பச் சூழலையோ, சமுதாய நிலையையோ அல்லது வயதையோ கணக்கிலே எடுத்துக் கொள்ளுவதில்லை. சுனாமி அலைபோல் ஈவிரக்கமில்லாமல் எல்லோரையும் கபாளீகரம் செய்து விடுகிறது. இப்படிப்பட்ட மரணம் சராசரி மனிதர்களை மாத்திரம் பயமுறுத்திப் பணிய வைக்காமல், மிகத்தேர்ந்த பக்திமான்களாக இருந்தவர்களையும் அவ்வப்போது பதம்பார்த்துத் தள்ளாடச் செய்திருக்கிறது.

ஆம், முற்பிதாக்களின் காலத்தைச் சார்ந்தவன் என்று நம்பப்படுகின்ற பொறுமையின் சிகரமாகிய யோபு, **"மனிதன் செத்தபின் பிழைப்பானோ?** என்றும், **"மனுபுரத்திரன் ஜீவித்துப் போன பின் அவன் எங்கே?"** என்றும் கேள்விகளை எழுப்பி, அதன் மூலம் மரணம் தன்னை எந்தளவு பாதிப்படையச் செய்திருக்கிறது என்பதை வெளிப்படுத்தியுள்ளான். மரணம் வாழ்க்கையின் முடிவு என்ற எண்ணமே மனிதர்களிடம் பொதுவாக ஆரம்பந் தொட்டுத் தலைதூக்கியிருந்துள்ளது. எபிரெய ஆசிரியர் சொல்லும்போது மனிதன் **"ஜீவகாலமெல்லாம் மரண பயம் உள்ளவனாக"** இருந்துள்ளான் என்கிறார். (எபி 2:15) இன்னும் சொல்லப்போனால், மழை நின்றும் தூவானம் நிற்கவில்லையென்பது போல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலே மரணத்தை மேற்கொண்ட பிறகும், மரணபயம் முற்றிலும் நீங்காத நிலையே காணப்பட்டிருக்கிறது. ஆம், தெசலோனிக்கே பட்டணத்துக் கிறிஸ்தவர்கள், அவர்களுக்குள் ஏற்பட்ட சரீர மரணத்தைக் குறித்துப் பயந்து அறிவில்லாமல் துக்கப்பட்டபோது, அவர்களுக்கு உண்மை நிலை குறித்து விளக்கம் கொடுத்து ஆறுதல்படுத்த வேண்டியிருந்தது. (1தெச. 4:13-18)

இப்படி ஆதிமுதல் மனிதனைத் தாக்கி வந்த மரண ஆயுதத்தின் கூரை இயேசு சிலுவையில் ஒடித்து, அதன் முனை முற்றிலும் மழுங்கும்படி செய்தார். (1கொரி. 15:54,55) அத்தோடு, மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திரையடைந்தவர்களின் முதற்பலனுமானார். (1கொரி. 15:20)

அன்பானவர்களே, இந்நன்மைகளெல்லாம், இயேசு சிலுவைக்குப் போனதால் தான் கிடைத்தது. கல்லறையிலிருந்து வெற்றி வீரராக வெளியே வந்ததால் தான் கிடைத்தது. அப்படியானால், இதன் பலனை உங்கள் வாழ்க்கையில் பெற்று அனுபவித்து வருகிறீர்களா? அதாவது, இந்த நிமிட வேளையிலும் நான் மரிக்கத்தயார், எனக்கு எவ்வித பயமுமில்லையென்று உண்மை மனதோடு சொல்லத்தக்கதொரு ஆன்மீக வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறீர்களா? சொல்லுங்கள். இல்லையென்பது உங்கள் பதிலானால் மரணத்தைக் கண்டு எந்தச் சூழ்நிலையிலும் அஞ்சாததொரு வாழ்க்கையை ஆரம்பிக்க இப்பொழுதே உங்களை ஒப்புக்கொடுங்கள்.

## III நித்திய அழிவு நிச்சயமானதாயிருக்கும்

இயேசு சிலுவைக்குப் போக மறுத்திருந்தால் என்ன நடந்திருக்கு மென்பதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய மற்றுமொரு காரியம், மானிடம் முழுமையும் நித்திய அழிவுக்கு உட்பட்டிருக்கும் என்பது.

நித்தியம், நித்தியம் என்று நாம் எவ்வளவு கத்திப் பிரசங்கித்தாலும், அது யாருக்கும் எவ்வித பயத்தையும் ஏற்படுத்துகிற மாதிரி தெரியவில்லை. நித்தியத்தைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாத சந்ததியின் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஏதோ "புறஜாதிகள்" என்றழைக்கப்படு கிறவர்களுக்குள் தான் இந்த நிலைமை என்று நாம் எண்ணாதபடி தலைமுறைகளாகவும், பரம்பரையாகவும் நாங்கள் கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்பவர்களுக்குள்ளும் இதுதான் யதார்த்த நிலை. மானிடம் இப்படி நித்தியத்தைக் குறித்து நிர்விசாரமாக இருப்பதைப் பார்க்கும்போது "**நித்தியம்**" என்ற வார்த்தையின் பொருள், அவர்களுக்கு உண்மையாகவே தெரிந்திருக்கிறதா என்ற சந்தேகம் வருகிறது. ஆம், அவ்வார்த்தைக்கான பொருள், உண்மையான அளவில் தெரிந்தால், எப்படிப்பட்ட அறிவிலியாக இருந்தாலும் இப்படி வாளாயிருக்கமாட்டான் என்றே நான் நம்புகிறேன்.

நித்தியம், என்பது கால எல்லைகளைக் கடந்தது. நமக்குத் தெரிந்திருக்கிற ஆயிரங்களோ, இலட்சங்களோ, கோடிகளோ இந்த நித்தியத்தை அளக்கப்போதுமானதல்ல. பரலோகமும், நரகமும் நித்தியமானதென்றே இயேசு சொல்லுகிறார். "அந்தப்படி, இவர்கள் **நித்திய ஆக்கினை** அடையவும், நீதிமான்களோ **நித்திய ஜீவனை** அடையவும் போவார்கள் என்றார்". (மத். 25:46) இன்னும், மாற்கு 9-ல் நரகத்தின் தன்மை அங்கே அடுத்தடுத்து மூன்று இடங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. "**அங்கே**

**அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்"** என்று (மாற். 9:44,46,48). ஒரு சாதாரண நெருப்புக் காயமே தாங்க முடியாத வேதனையைக் கொடுக்கிறதாக இருக்கும்போது, நித்திய காலத்திற்கும் அவியாத அக்கினியைக் கொண்டிருக்கும் நரகம் தரும் வேதனை எப்படியிருக்குமென்று அப்படியே கற்பனை செய்து பாருங்கள். நினைக்கவே பயமாகவும், நடுக்கமாகவும் உள்ளது உங்களுக்கு அப்படியில்லையா?

இப்படிப்பட்ட நித்திய அழிவை நோக்கி படுவேகமாகப் போய்க்கொண்டிருந்த பாவ மானிடம், அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படியான வாய்ப்பு இயேசு சிலுவைக்குப் போனதால் தான் கிடைத்தது. உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் பாவிகளாக இருக்கிறபடியால் இந்த நித்திய அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படியான வாய்ப்பை நாம் எல்லோரும் பெற்றிருக்கிறோம். பழைய ஏற்பாட்டின் நாட்களாக இருந்தாலும், புதிய ஏற்பாட்டின் நாட்களாக இருந்தாலும், பாவம் செய்யாதவன் ஒருவனும் இல்லையென்றே வேதவசனம் திட்டமாகச் சொல்லுகிறது. "நாமெல்லாரும் ஆடுகளைப் போல் வழிதப்பித் திரிந்து அவனவன் தன் தன் வழியிலே போனோம் என்கிறான் ஏசாயா (ஏசா. 53:9) இன்னும், "எல்லாரும் பாவஞ் செய்து" (ரோமா 3:23) "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை.... எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்" (ரோமா. 3:10,11) என்று பவுல் கூறுகிறார். அப்படியானால், மனுக்குலம் முழுவதும் நித்திய அழிவுக்காகவே வைக்கப்பட்டிருந்தது. ஆயினும், தேவன் இயேசுவைக் கொண்டு சிலுவையின் மூலம், நாம் நித்திய அழிவிலிருந்து காப்பாற்றப்படும்படியான வாய்ப்பைத் தந்துள்ளார்.

அருமையானவர்களே நாம் ஒவ்வொருவரும் இந்த அரிய வாய்ப்பை நம்முடைய வாழ்வில் பயன்படுத்திக் கொண்டு, நித்திய அழிவிலிருந்து காப்பாற்றப்படுவோம் என்ற நம்பிக்கையைப் பெற்றுவிட்டோமா? சொல்லுங்கள். ஒருவேளை பெறாமலிருந்தால் இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தோடு, ஞானஸ்நானத்தின் மூலம் உடனடியாகத் தொடர்பு கொண்டு, பாவமன்னிப்புப் பெற்று, புதிதான ஜீவனுள்ளவர்களாய் வாழ்வதன் மூலம் (ரோம 6:3,4) அந்த நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வோம். அதன் மூலம் நித்திய அழிவிற்கு நமது ஆத்துமாவைத் தப்புவிப்போம்.

இப்படி, சத்திய வசனத்தின்படி நாம் ஒவ்வொருவரும் செய்யும்படியான பெலனை பரலோகத்தின் தேவன் நமக்குத் தந்தருளுவாராக ! ஆமென்

**EZS. ராஜநாயகம்**

ஜெபியுங்கள் ! பங்கு பெறுங்கள் !!

# எட்டாவது வேனிற்கால வேதாகம முகாம்

மற்றும்

# திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

இடம் : YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)
(ஈரோடு - சென்னை இரயில் மார்க்கத்தில்.
ஜோலார் பேட்டை ஜங்ஷனிலிருந்து சுமார் 25 கி.மீ.)
(திருப்பத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சுமார் 30 கி.மீ.)

நாள் : மே மாதம் 2, 3, 4 - 2005 (திங், செவ், புதன்)

## சிறப்பம்சங்கள்

❀ கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான சந்தர்ப்பம்.

❀ தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் தலைசிறந்த ஊழியர்கள்.

❀ ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்

❀ கோடை வாசஸ்தலம் - சமச்சீரான தட்ப வெப்பம்.

❀ குடும்பத்துடன் தங்குவதற்கு ஏற்ற சூழ்நிலை.

❀ பெண்களுக்கு தனி இடவசதி.

உணவும், தங்குமிடமும் இலவசம்

**பதிவுக் கட்டணம்**

பெரியவர்கள் ரூ. **80 /-** சிறியவர்கள் ரூ. **50 /-**

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382

குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே பணம் M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.

# ஆராதனைக்கென்று நாம் ஏன் கூடி வருகிறோம்

தேவனை ஆராதிக்கும் நோக்குடன் கிறிஸ்தவர்களாக இருக்கின்ற மற்றும் கிறிஸ்துவின் சபையாராகிய நாம் வாரத்தின் முதல் நாள்தோறும் கூடிவருகிறோம். அதை நாம் செய்ய அநேக காரணங்கள் உண்டு.

ஆரம்பக் கருத்தாக, நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் ஒருவரே என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவரே நமது சிருஷ்டிகராகவும், நமக்கு உண்டான எல்லா ஆசீர்வாதங்களின் ஆதாரமாகவும் இருக்கிறார். அவர் தமது அன்பின் நிமித்தமாக தனது ஒரே பேரான குமாரனை உலகத்திற்கு அனுப்பி நமது பாவத்திற்காக அவரை கல்வாரி சிலுவையில் ஒப்புக்கொடுத்தார், அவருடைய கிருபை, இரக்கம், ஆகிய இவைகளால் நமக்கு இரட்சிப்பு உண்டாகியிருக்கிறது. அவருடைய பிள்ளைகளாக இருக்கிற நாம், அவருக்கு சேவை செய்து, அவரை ஆராதித்து, அவர் சொன்னபடி நாம் நடக்க, வாழ முயற்சி மேற்கொள்கிறோம். "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத்தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ளவேண்டும் என்றார்." (யோவா 4:24) நாம் சேவிக்கிற தேவன் மனிதனோ, மிருகமோ அல்லது கையினால் செய்யப்பட்ட விக்கிரகமோ அல்ல. அவர் சூரிய, சந்திர நட்சத்திரங்களால், நதியினால், மலையினால், மனிதன் உண்டாக்கினவைகளால் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. அவர், ஆவியாயிருக்கிறார், எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர், ஜீவனைக் கொடுத்து அதை காப்பாற்றுகிறவர். தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லுவான் (சங். 14:1)

நமது ஆராதனை பரலோகத்தின் தேவனுக்கு துதியையும், புகழ்ச்சியையும், நமது சேவையையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. நாம் செய்கிற விஷயங்களை, உண்மையோடு, தாழ்மையோடு, பயபக்தியோடு, அதில் முழுகவனம் செலுத்தி செய்ய வேண்டும்.

நமது ஆராதனை உண்மையோடும் இருக்க வேண்டும். அதாவது, நாம் சத்தியத்தோடு, தேவன் சொல்லியிருக்கிற வார்த்தையின்படியே அதை செய்ய வேண்டும். தேவன் தான் ஆராதிக்கப்படத்தக்கவர், ஆகவே, நாம் நம்மை திருப்த்திபடுத்தாமல், அவரைப் பிரியப்படுத்த நாட வேண்டும்.

அதாவது மனித கற்பனைகளைக், கட்டளைகளாக கொண்டு நாம் தேவனை ஆராதிக்கக் கூடாது (மத் 15:9) நாம் அறியாமையுள்ளவர்களாக தேவன் ஆராதித்தால், தேவன் அதில் பிரியப்படமாட்டார் (அப் 17:30) அல்லது, எப்படி ஆராதித்தாலும் தவறில்லை, நாம் உண்மையாக, நேர்மையாக இருந்தால் போதும் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார். எப்படி வேண்டுமானாலும் ஆராதிக்கலாம் என்றால் தேவன் அதை பற்றி நம்மிடம் வேதத்தின் மூலமாய் பேசியிருக்கமாட்டார்.

வேதாகமத்தின்படி கிறிஸ்தவர்களாகிய நாம் வாரத்தின் முதல் நாள்தோறும் தேவனை ஆராதிக்கும்படி கூடி வரவேண்டும். அதற்கு உதாரணத்தை அப்போஸ்தலர் 20:7-ல் நாம் படிக்கிறோம், "வாரத்தின் முதல் நாளியே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடிவந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்" (அப் 20:7) பழைய ஏற்பாட்டுக் காலத்தில், ஓய்வு நாள் தான் ஆராதிக்கும் நாளாக இருந்தது. ஆனால் கிறிஸ்து அதை சிலுவையில் ஆணியடித்து முடித்து வைத்து தமது பிரமாணத்தை துவக்கினார் (கொலோ 2:14) நியாயப் பிரமாணத்தை அவர் சிலுவையில் அடிப்பதின் மூலமாய், ஓய்வு நாளையும் முடித்து வைத்தார். கிறிஸ்து வாரத்தின் முதல் நாளில் உயிர்த்தெழுந்தார் என்று நாம் படிக்கிறோம். (மத் 28:1-6) அதுபோலவே, சுவிசேஷமும் வாரத்தின் முதல் நாளில் பிரசங்கிக்கப்பட்டு, சபை அந்நாளிலே ஆரம்பமானது (அப் 2) இறுதியாக வாரத்தின் முதல் நாள் தோறும் நாம் கர்த்தருக்கென்று கொடுக்க வேண்டுமென்று பவுல் கொரிந்து சபைக்கு எழுதினார். சிலர் இப்படிச் சொல்கிறார்கள், கிறிஸ்தவன் வாரத்தின் முதல் நாள் தோறும் கூடி வர வேண்டுமென்று எங்கு வேதத்தில் சொல்லியிருக்கிறது என்று, பழைய ஏற்பாட்டில் கர்த்தர் ஒவ்வொரு ஓய்வு நாளையும் பரிசுத்தமாக ஆசரிக்க வேண்டும் என்றா சொன்னார்? இல்லை. ஆனால், யூதர்கள் ஒவ்வொரு ஓய்வு நாளையும் ஆசரித்தார்கள். அதாவது, வாரத்தின் முதல் நாள் என்றால், அது எப்பொழுதெல்லாம் வருகிறதோ அப்பொழுதெல்லாம் நாம் அதை ஆசரிக்க வேண்டும்.

எபிரெய ஆசிரியர் சொல்லும் போது, நாம் சபை கூடி வருதலை விட்டுவிட கூடாது என்று நமக்கு எடுத்துரைக்கிறார், "அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே, மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர்

புத்திசொல்லக்கடவோம்: நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும், சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்". (எபி 10:23-27) அவர் சொல்லுவதை கவனியுங்கள் நாம் சபை கூடி வருதலை ஒரு போதும் விட்டு விடக் கூடாது என்கிறார். அவர் எதை குறித்துப் பேசுகிறார்? நாம் விட்டுவிடக் கூடாத கூடிவருதல் எது? அவர் சொல்லுகிறார் சிலர் அதை விட்டு விட்டது போல நீங்கள் விடக்கூடாது என்று. அதற்கு மாறாக நாளானது சமீபமாக இருப்பதைக் கண்டு நாம் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லவேண்டும் என்று சொல்லுகிறார். ஆனால், நாம் கர்த்தருடைய சித்தத்தை அறிந்திருந்தும் தொடர்ந்து பாவம் செய்வோம் என்று சொன்னால், அந்த நிலைமையில் கர்த்தர் நம்மை இரட்சிக்கமாட்டார். ஆகவே, கர்த்தருடைய சித்தத்தை அறிவது மட்டும் முக்கியமானது அல்ல அதன்படி செய்வது தான் மிக முக்கியமானது. அது சபை கூடி வருதலையும் உள்ளடக்கி இருக்கிறது.

நாம் வாரத்தின் முதல் நாளில் தேவனை ஆராதிக்கும்போது என்ன செய்யவேண்டும்? அநேக காரியங்களில் வேதாகமத்தில் பட்டியலிடப் பட்டிருக்கிறது. அப்போஸ்தலர் 20:7ன் படி நாம் கர்த்தரின் பந்தியை கைக்கொள்ள கூடிவருகிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதுகையில், "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில் கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூறும்படி, இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து; இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது: நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள், இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான், எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன், என்னத்தினாலெனில், அப்பாத்திரமாய் போஜன பானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம்

இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்". (1 கொரி 11:23-29) என்கிறார். அப்பம், கிறிஸ்துவின் சரீரத்திற்கும், திராட்ச ரசம் அவருடைய இரத்தத்திற்கும் மாதிரியாக வைக்கப்பட்டிருப்பதை கவனியுங்கள். வேறு வார்த்தையில் சொன்னால், நாம் இரட்சிக்கப்பட என்ன விலை கொடுக்கப்பட்டது என்பதை நாம் நினைவு கூருகிறோம். நாம் அப்படிச் செய்வது அவர் மீண்டும் வருவதையும் காட்டுகிறது. நாம் கர்த்தருக்கு முன்பாக பயபக்தியாக இருக்கிறோமா என்று நம்மை ஆராய்ந்து பார்க்கிற தருணம் தான் கர்த்தரின் பந்தி. அது மாத்திரமல்ல கிறிஸ்தவர்கள், உலகத்திற்கு சில பாடங்களை சொல்லித்தர அது ஏற்ற சமயமாகவுமிருக்கிறது.

ஒரு கிறிஸ்தவன், வாரத்தின் முதல் நாளில் சபை கூடி வரும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறான், அவன் அப்படிக் கூடி வரும்போது அடுத்ததாக தனது வருமானத்திற்கு தக்கதாக தேவனுக்கு கொடுக்க வேண்டியது அவசியம், பவுல் கூறுகிறார், "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டு சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள், நான் வந்திருக்கும் போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்" (1கொரி 16:1,2) மீண்டுமாக பவுல் கூறும்போது, "பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான், அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (2 கொரி 9:6,7) என்கிறார். நமது ஆண்டவர் காணிக்கை பற்றி கூறும்போது, "இப்படிப் பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்..." (அப் 20:35) என்கிறார். பழைய ஏற்பாட்டில் பத்தில் ஒரு பங்கு கர்த்தருக்கென்று கொடுக்க வேண்டும். ஆனால் அந்த பிரமாணம் இப்பொழுது அமுலிலில்லை. கிறிஸ்தவர்களாகிய நாம் நமது வரவுக்கு தக்கதாக கொடுக்க வேண்டும். அது எவ்வளவு? அது நிச்சயமாக பத்தில் ஒரு பங்கைக் காட்டிலும் அதிகம் கிறிஸ்துவின் காலத்தின் முன் வாழ்ந்தவர்களைக் காட்டிலும், நமக்கு ஆசீர்வாதம் அதிகமாகவே இருக்கிறது.

வாரத்தின் முதல் நாளில் நாம் கூடி வருகையில், தேவனை துதித்து பாட வேண்டும். எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதுகையில் "சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு,

உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி" (எபே 5:19) மற்றும் கொலோசியர் 3:16,17-ல் பவுல் கூறுகையில், "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப் பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி, வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலை யாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்" என்கிறார். நீங்கள் இந்த வசனத்திலும், மற்ற வசனப் பகுதிகளிலும் நாம் பாட வேண்டும் என்று சொல்லுவதை கவனிக்கிறீர்கள். எபிரெய ஆசிரியர், "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபி 13:15) என்கிறார். கர்த்தருடைய ஜனமாகிய நாம் இசை கருவிகளை சபையில் பயன்படுத்துவதில்லை. புதிய ஏற்பாட்டில் இசை கருவிகளை பயன்படுத்த நமக்கு அனுமதியில்லை. ஆகவே, நாம் அதை பயன்படுத்துவதில்லை.

இறுதியாக, நாம் வாரத்தின் முதல் நாளில் கூடிவரும் போது கர்த்தருடைய வசனத்தை கேட்க வேண்டும். நாம் படிக்கும்படி ஊக்கப்படுத்தப்படுகிறோம் (2 தீமோ 2:15) கிறிஸ்தவர்கள், வேதத்தை ஆராய்ந்து பார்க்க அழைக்கப்பட்டிருக்கிறார்கள் (யோவா 5:39) ஆதிக்கிறிஸ்தவர்கள், "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்". (அப் 2:42) வேதாகமத்தை ஆராயாமல் தேவனை எப்படி நாம் ஆராதிப்பது?

நீங்கள் தேவனை ஆராதிக்கிறீர்களா? அவரை இடைவிடாமல் ஆராதிக்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? நீங்கள் கிறிஸ்தவராக இல்லை என்றால், அவரை தொழுது கொள்ளும்படி அவருடன் சீரான உறவை நீங்கள் இன்னும் பெறவில்லை. ஆகவே நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாற நாங்கள் உங்களை ஊக்கப்படுத்துகிறோம். கிறிஸ்து சொன்னார், "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற் 16:16)" நீங்கள் அதை செய்தால், கிறிஸ்து உங்களை அவருடைய சபையில் சேர்ப்பார் (அப்போ 2:47) அப்பொழுது நீங்கள் ஆராதிக்கலாம்.

**J.C. CHOATE** **J.C. சோட்**

பெண்கள் பகுதி

# முழுமையான கிறிஸ்தவப் பெண்

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! ஸ்தோத்திரம். முழுமையான கிறிஸ்தவப் பெண் என்றால் என்ன? இதற்குண்டான பதிலை நாம் ஒரே வரியில் சொல்லிவிட முடியாது. இது அநேக பண்புகளை உள்ளடக்கியுள்ளது. நாம் முழுமையான கிறிஸ்தவப் பெண்களாக திகழ்வதற்கு தேவன் நமக்கு குணாதிசயங்களை கொடுத்திருக்கிறாரா? ஆம், நாம் முழுமையாகும்படி பூமிக்குண்டான ஞானத்தை தேடிச் செல்ல வேண்டியதில்லை. வேதாகமம் தேவையான அனைத்தையும் நமக்கு கொடுத்திருப்பதால் அவைகளை வழிகாட்டியாக வைத்து நம்மை முழுமைப் படுத்திக் கொள்ள முடியும்.

**மூன்று வேத பகுதிகளை இங்கு காண்போம்**

கலாத்தியர் 5:22-24:

**ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், இப்படிப் பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை**

கொலோசெயர் : 3:12-14 : -

**ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத் தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும், தரித்துக்கொண்டு ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.**

**இவை எல்லாவற்றின் மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்.**

1பேதுரு : 1:5-7 :-

**இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும்,**

**இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும் தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்.**

மேற்கண்ட வசனங்களில் எவ்வளவு பண்புகள் நிறைந்து கிடக்கிறது என்பதை பாருங்கள்! இவ்வளவையும் பரிசுத்த ஆவியானவர் நமக்கு கொடுத்திருக்கிறார். நாம் முழுமையானவர்களாக ஜீவிக்க வேண்டும் என்பதில் தேவன் எந்த அளவு அக்கறையுள்ளவராக இருக்கிறார் என்று நினைக்கும் போது நாம் அவருக்கு ஓயாமல் நன்றி செலுத்த வேண்டும். இனி இதில் விசுவாசம், அன்பு, பொறுமை ஆகிய மூன்றை மட்டும் இம்மாதம் பார்ப்போம்.

**முழுமையான வாழ்க்கைக்கு அஸ்திபாரம் போன்றது விசுவாசம் :-**

**"விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்"**. (எபி : 11:6) கிறிஸ்தவ மார்க்கமே விசுவாசத்தின் மார்க்கம் தான். விசுவாசத்தை பெற்றுக்கொள்ள வேதத்தை நாம் படித்து தியானிக்க வேண்டும். வசனங்கள் அனைத்துமே தேவ ஆவியினால் அருளப்பட்டது என்று விசுவாசிக்க வேண்டும். உணர்வுப் பூர்வமாக விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள இயலாது. **விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்** (ரோமர் : 10:17) வசனம் சொல்கிறபடி வசனத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். அப்போதுதான் மற்ற குணாதிசயங்கள் நம்மிள் குடி கொள்ளும். அஸ்திபாரமான விசுவாசமே இல்லையானால், அன்பு, இரக்கம், பொறுமை, தயவு, சாந்தம், ஞானம் இவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது. விசுவாசம் நம்மை ஞானஸ்நானத்திற்கு வழிநடத்துகிறது. ஞானஸ்நானம் நம்மை இரட்சித்து, கிறிஸ்து தன் இரத்தத்தை சிந்தி சம்பதித்த அவருடைய சபையில் சேர்த்துக்கொள்கிறது.

**விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக் கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான்** (மாற்கு 16:16) ஆக விசுவாசம் நம்மை பூரணத்துக்கு அழைத்துச் செல்கிறது.

**ஒரு முழுக்கிறிஸ்தவ வாழ்க்கைக்கு வெளிப்படையாய் தெரியும் குணம் அன்பு :-**

நாம் எவ்வளவுதான் நல்ல பண்புகள், குணாதிசயங்களைப் பெற்றிருந்தாலும் அவைகள் அன்போடு கூட இல்லாமல் இருந்தால் அனைத்தும் வீண்தான். உலகிற்கு நம்மை வேறுபடுத்திக் காட்டுவது இந்த அன்பு.

**பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம். ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான். 1யோவான் 4:7**

அன்புள்ள ஒருவர் அதை தன் கிரியையில் காண்பிக்க வேண்டும். தேவன் நம்மீது எவ்வாறு அன்பு கூர்ந்தார்? தன் ஒரே பேரான குமாரனைக் கொடுத்ததின் மூலமாக (யோ: 3:16) அவர் நம்மீது கொண்ட அன்பை விளங்க பண்ணினார். யாக்கோபு ஆசிரியர் சொல்வது போல நம்முடைய அன்பு, புசித்து திருப்தியாயிரு, குளிர்காய் என்று வாயிலே கூறும் அன்பாக இருக்கக்கூடாது. (யாக்கோபு 2:16) நாவினாலும், வசனத்தினாலுமல்ல. கிரியையினாலும், உண்மையினாலும் அன்பு கூற வேண்டு (1 யோவான் 3:18) ஆக தேவன் எப்படி மனிதர்கள் யாரும் நினைத்துபார்க்கக்கூட முடியாத ஒரே பேரான குமாரனை கொடுக்கும் அன்பை வெளிப்படுத்தினாரோ அதே போல் நாமும் தேவன் மீது அன்பு காட்ட வேண்டும். எவ்வாறு நம் அன்பை அவருக்கு செலுத்துவது? நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூறுவதாம் (1யோ : 5:3)

முதலாவது நம் அன்பு தேவன் மீது இருக்க வேண்டும். அப்படியானால் அவர் வெளிப்படுத்தியுள்ள வசனங்களை நாம் அப்படியே கைக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவப் பெண்களாகிய நாம் இந்த அன்பை நம் வாழ்வில் கடைபிடித்தாக வேண்டும். அப்போது நம் வார்த்தை, செயல், எல்லாவற்றிலும் ஒரு மாற்றத்தை பிறர் காணமுடியும். நம் கணவர், நம் பிள்ளைகள் நம்மில் பாடம் கற்றுக் கொள்ள இது பெரிதும் உதவும்.

இந்த பண்புகளை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்வோம். அப்போது நாம் முழுமையடைய அது உதவி செய்யும்.

**III <u>பொறுமை :-</u>** இந்த அவசர உலகில் ஒரு கிறிஸ்தவப் பெண் இந்த பண்பைப் பெற்றுக்கொள்வதென்பது சற்று சிரமம்தான். நம்மிலேயும், நம் பிள்ளைகள், நம்மிடம் பழகுகிறவர்கள், நம் கணவன், உறவினர் இடமும் எல்லோரிடமும் நாம் பொறுமையை இழந்து விடுகிறோம். ஒரு கிறிஸ்தவப் பெண்ணுக்கு பொறுமை மிகவும் அவசியம். **"உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்."** (லூக்: 21:19)

நீண்ட பொறுமையோடிருக்க வேண்டும். ஏனென்றால் அது நம் ஆத்மா சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. பொறுமையை நாம் எங்கிருந்து பெற்றுக் கொள்ள முடியும்? வேத வசனத்திலிருந்து மட்டுமே **"தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும்....."** (ரோமர் 15:4) **உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்** (யா: 1:3) முழுமையான கிறிஸ்தவப் பெண்ணாவதற்கு **பொறுமை அவசியம்.** முதிர்ந்த கிறிஸ்தவப் பெண் கட்டாயம் பொறுமையுடையவளாகத் தான் இருப்பாள். நம்முடைய பெலவீனங்களை அடையாளம் கண்டு, அவசரம், கோபம் இவைகளை விலக்கி பொறுமையோடு நாம் ஜீவிக்க வேண்டும். நம் நடையில் பொறுமை, வார்த்தையில் பொறுமை, செய்கையில் பொறுமை, எல்லாவற்றிலும் பொறுமை காட்டுவது மிகவும் நல்லது.

இப்படி நல்ல பண்புகளை வளர்த்துக் கொண்டால்தான் நாம் முழுமையான கிறிஸ்தவப் பெண்ணாகத் திகழமுடியும். முழுமையான கிறிஸ்தவப் பெண் தான் பரலோகம் செல்ல முடியும். எனவே கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே வேதம் சொல்லுகிற அனைத்து பண்புகளையும் தெரிந்து, நம்மில் வளர்த்துக் கொள்ள தேவன் உதவி செய்வாராக! ஆமென்

**ரேச்சல் இராஜநாயகம்**

## தேவனுடைய வார்த்தையின் தன்மைகள் / செயல்பாடுகள்

*சங்கீதம் 19:7-11*

- *குறைவற்றது (:7)*
- *ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது (:7)*
- *சத்தியமானது (:7)*
- *பேதையை ஞானியாக்குகிறது (:7)*
- *செம்மையானது (:8)*
- *இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறது (:8)*
- *தூய்மையானது (:8)*
- *கண்களைத் தெளிவிக்கிறது (:8)*
- *உண்மையாயிருக்கிறது (:8)*
- *நீதியாயிருக்கிறது (:9)*
- *பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கது (:10)*
- *எச்சரிக்கிறது (:11)*
- *கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலனிருக்கிறது (:11)*

வாலிபர் பகுதி

# தனிமையில் நீ வாடும் போது ....

தாயின் கருவில் உருவாகி, ஊன் பெற்று, ஏற்ற காலத்தில் இவ்வையகத்தில் உதித்த ஒவ்வொரு மனிதனும், பச்சிளங்குழந்தையாக வாழ்வைத் துவங்கி, பருவமடைந்து, பக்குவப்பட்டு, விருத்தியடைய விவாகம் புரிந்து, வாழ்ந்து சுகித்து, மூப்படைந்து, நாசியில் மூச்சு நின்று போய் மண்ணுக்கு திரும்பியதால் இக்குவலயத்து வாழ்க்கைக்கு முடிவுரை எழுதும் வரை, ஏதோ ஒரு கட்டத்தில் தன் வாழ்க்கையில் தனிமையை உணராதிருப்பதில்லை, ஒன்று வாலிபத்தில் தன் உணர்வை புரிந்து கொள்ள ஒருவருமில்லை என்றேங்கி, தனிமையை தன் உள்ளத்தில் தங்கி பரிதியால் வாடும் மலராக துவண்டுவிடுவதுண்டு, அல்லது வயதடைந்து, நாடி நரம்பெல்லாம் நலிவடைந்து, உதவியின்றி, உள்ளம் தனிமையில் தவித்து வருந்துவோருமுண்டு. எப்படியோ மனிதன் தனிமையை தன் வாழ்வில் ருசி பார்க்கிறான் என்பதை என்னோடு நீங்களும் ஒப்புக் கொள்ளுவீர்களென திடமாக நம்புகிறேன்.

ஆதரையை ஆதியில் சிருஷ்டித்த அநந்த ஞானம் கொண்ட அநாதி தேவன், மனிதன் தனியேயிருப்பது நல்லதல்ல என்றார். தனிமை ஒரு மனிதனை மிகவும் சோர்வடையச் செய்யும் என்பதை அறிந்தவர், அவனுக்காக ஏற்ற துணையையும் உண்டாக்கினார். பழைய ஏற்பாட்டு தீர்க்கனாகிய எலியா, தேவனுக்காக தான் மட்டும் மிஞ்சியிருப்பதாக எண்ணி, யெசபேல் என்னும் வஞ்சிக்கு அஞ்சி வெகுதூரம் ஓடினான் என்பதை நாம் அறிவோம். தனிமை அவனை அப்படி ஓடும்படி செய்தது. இழந்துபோனதைத் தேடி வந்த இயேசுபிரான், தன் சிலுவைக்கு போகும்முன், எல்லாரும் தன்னை விட்டு ஓடிப்போனதை உணர்ந்தார், அதுமாத்திரமா, சிலுவையில் தேவன் தன்னை ஒரு நொடி கைவிட்ட போது, "என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" எனக் கதறினார். இது தனிமையின் கோரக்குரல் அல்லவா ! இதுபோலவே அப்போஸ்தலனாகிய பவுல் தன் வாழ்வில் கிறிஸ்துவுக்காய் குரல் கொடுக்கையில் தனிமையில் வாடினார், அப்படி வாடும் போதும் அவர் யார் துணை தேடினார், யார் புகழ் பாடினார் என்பதை பற்றியும், இம்மாதம் நாம் கற்றிடுவோம் வாரீர் வாலிபரே.

## உங்கள் மனப்பான்மையை கவனியுங்கள்

வாழ்வின் இக்கட்டான சூழ்நிலையில், நாம் கீழ்நிலை யிலிருக்கையில் நம்மை நண்பர்கள் கைவிட்டுவிடுவார்கள் என்பது உலகறிந்த உண்மை. பணமிருந்தால் பந்தமுண்டு, பணமில்லாதவனுக்கு பங்கம்தானுண்டு என்பது யதார்த்தம். பவுல் தன் அந்திய காலத்தில் தன் விசுவாசத்தில் பெற்றெடுத்த உத்தம குமாரனுக்கு எழுதுகையில், "நான் முதல் விசை உத்தரவு சொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடே கூட இருக்கவில்லை, எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள் ...." (II தீமோ 4:16) என்கிறார். அவருடைய வாழ்விலும் அவர் தனிமையை ருசித்திருக்கிறார். "எல்லாரும் என்னை கைவிட்டார்கள்" என்று அவர் எழுதுகையில் அவருடைய ஏக்கத்தின், வேதனையின், தனிமையுணர்வின் குரல் நம் காதில் விழுகிறதல்லவா?

எனக்கன்பானவர்களே ! பொதுவாக நம்மை தனிமையில் விட்டுவிட்ட நமது நண்பர்களையோ அல்லது உறவுகளையோ நாம் பழிவாங்க வேண்டுமெனதானே நினைப்போம். ஆனால் இங்கு தான் நாம் பவுலைக் கவனிக்க வேண்டும், "எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்" என்று சொன்னவர் தொடர்ந்து "அந்தக் குற்றம் அவர்கள் மேல் சுமராதிருப்பதாக" (II தீமோ 4:16) என்கிறார். எனதருமை வாலிப நெஞ்சங்களே, நம்மை கைவிட்டவர்களை, தனிமையில் தவிக்கவிட்டவர்களை நாம் மன்னிப்பது மிக சிறந்ததொரு குணமாகும். பவுல் கிறிஸ்துவை பின்பற்றினது போல நாமும் செய்வது சாலச் சிறந்த செயல். (லூக்கா 23:34 ; 1 கொரி. 11:1) ஸ்தேவான் இதற்கு மிகச்சிறந்த உதாரணங்களாகவும் திகழ்கிறான் (அப். 7:60; )

நாம் தனிமையில் வாடும்போது கூட, இரக்கமில்லாமல் நம்மை ஏமாற்றுவோரும், நமக்கு தீமை செய்வோரும் உண்டு, பவுல் அனுபவித்ததைக் கவனியுங்கள், "கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமை செய்தான்;" (II தீமோத் 4:14) என்கிறார். பொதுவாக நம்மை காயப்படுத்துகிறவர்களை நாமும் காயப்படுத்த முயற்சிப்பதுதான் இவ்வுலக வழக்கம், ஆனால் அப்போஸ்தலன் தொடர்ந்து சொல்வதை கவனியுங்கள், "அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக". (II தீமோத் 4:14) என்று கூறுகிறார். அவருடைய மனப்பான்மையை கவனியுங்கள், தனக்கு தீமை செய்கிறவர்களை கர்த்தர் பார்த்துக்கொள்ளட்டுமென அவர் விட்டுவிடுகிறார் (ரோமர் 12:19) நாமும் இதே அடிச்சுவட்டில் பயணித்தல் நன்று.

## உங்கள் கிரியைகளை கவனியுங்கள்

தனிமையில் வாடிக்கொண்டிருந்த பவுல், சோர்ந்து போய், ஓரிடத்தில் உட்கார்ந்து கார் முகில் என்னை சூழ்ந்தது, எல்லாம் எனக்கு எதிராகவே நடக்கிறது, நான் நிர்கதியாக நிற்கிறேனென புலம்பிக்கொண்டு மாத்திரமிருந்தாரா? அல்லது இந்த தேவ மனுஷன் அச்சூழ்நிலையில் வேறெதாவது செய்தாரா? என்று நாம் கவனித்து பார்த்தால், அவர் தீமோத்தேயுவை "நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வர ஜாக்கிரதைப்படு" என்கிறார் அப்படிச் சொல்லியதோடு இந்த மாமனிதன் கூறுவதை பாருங்கள், "துரோவா பட்டணத்திலிருக்கிற கார்ப்பு என்பவன் வசத்தில் நான் வைத்து வந்த மேலங்கியையும், புஸ்தகங்களையும், விசேஷமாய்த் தோற்சுருள்களையும், நீ வருகிறபோது எடுத்துக்கொண்டு வா". (IIதீமோத் 4:13) என்கிறார்.

தனியாக இருக்கும் வேளையில் எனக்கு துணையாகி இந்நூல்களிருக்குமென நினைத்தாரோ என்னவோ தெரியவில்லை? யார் தன்னை கைவிட்டாலும், வேதமும், வேதம் சம்பந்தப்பட்ட நூல்களும் தன் உறவுக் கயிறை ஒரு போதும் அறுத்துக் கொள்ளாதாகையால் அப்படிக் கூறுகிறார். எனக்கன்பானவர்களே, நாமும் கூட எல்லாராலும் கைவிடப்படலாம், நாம் நம்பியிருந்தவைகள் நம்மை விட்டுப் பிரியலாம், அவ்வேளையில், வேதத்தையும், அது சார்ந்த நூலையும் வாசித்தால், தனிமையில் நாம் வாடினாலும், நமக்கு அந்நூல்கள் ஆறுதலை அளிக்கும் என்பதுறுதி. இக்கருத்துக்கு வலுசேர்க்க சங்கீதக்காரன் சொல்லுவதைக் கவனியுங்கள், "உமது வேதம் எனக்கு மனமகிழ்ச்சியாயிராதிருந்தால் என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்" (119:92) என்ற அனுபவ மொழியை நமக்கு யாத்துக் கொடுத்திருக்கிறார். ஆகவே, நாம் தனிமையிலிருக்கையில் பரமனின் துணை நாடுவோம்.

பவுல், தான் தனிமையிலிருக்கையில் வேறு என்ன செய்தார் என்று ஆராய்ந்து பார்த்தால், தீமோத்தேயுவை வரச் சொன்னவர், அவனோடு, "...மாற்குவை கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் பிரயோ ஜனமுள்ளவன்" (II தீமோ 4:11) என்கிறார். ஆக, சிறையிலிருந்தாலும், தனிமையில் தவித்தாலும், தர்பரன் இயேசுவின் சுவிசேஷச் செய்தியை மற்றவர்களுக்கு கூறுவதை அவர் ஒருபோதும் நிறுத்திக்கொள்ளவில்லை. மாறாக அக்காரியத்தில் உதவியாக இருப்பவர்களின் துணை நாடியிருக்கிறார். பிலிப்பு சபையாருக்கு அவர் எழுதுகையில், "சகோதரரே எனக்குச் சம்பவித்தவைகள் சுவிசேஷம் பிரபலமாகும்படிக்கு ஏதுவாயிற்றென்று நீங்கள் அறிய மனதாயிருக்கிறேன். அரமனை யெங்குமுள்ளவர்களுக்கும் மற்ற யாவருக்கும் என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள்ளான கட்டுகளென்று வெளியரங்கமாகி" (பிலி 1:12,13) என்கிறார், ஆக பவுலை சங்கிலியினால் ரோம அரசு கட்டினாலும், அவர் கிலியடையாமால் சுவிசேஷத்தை அரமனையில்யுள்ளவர்களும் கேட்கும்படி செய்தார். நாமும் கூட நமது வாழ்வில் எத்தனைபாடுகள் வந்தாலும் கிறிஸ்துவுக்காய் கிரியை செய்வதை நிறுத்தாமலிருப்போம்.

**உங்களுக்கு நிச்சயமான காரியங்களை தியானியுங்கள்**

இவ்வுலக வாழ்க்கையில் தனிமையில் வாடும்போது, அப்போஸ்தலனாகிய பவுல் நிச்சயமாக கூறும் வார்த்தைகளைக் கவனியுங்கள், "இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப் பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் **அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்;** எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (II தீமோத் 4:8) என்கிறார் என்ன ஒரு தைரியமான, உறுதியான வார்த்தைகள். இவ்வுலகில் மனிதர்கள் நம்மை தனியே தவிக்க விடலாம் ஆனால், பரலோகத்தில் நமக்கு நீதியின் கிரீடம் நிச்சயம் உண்டு என்பதை அவர் தன் வாழ்வில் அறிந்திருந்தார். தனிமையை தன்னை விட்டு விரட்டும் சூத்திரத்தை நன்றாக புரிந்திருந்தார்.

எனக்கன்பானவர்களே, அப்போஸ்தலனாகிய பவுலை எல்லாரும் கைவிட்டார்கள் என்பது உண்மை ஆனால், கர்த்தர் அவரை கைவிட்டாரா? அவரே பதிலுரைக்கிறார் பாரீர், "கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று ... பலப்படுத்தினார்.... சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன் " (II தீமோ 4:17) என்கிறார். ஆகவே எனக்கன்பானவர்களே, யார் நம்மை கைவிட்டாலும், நம்மை கைவிடாத கர்த்தர் ஒருவர் இருக்கிறார். நாம் தனிமையில் சோர்ந்து போய், சோதனையில் அகப்பட்டு, பிசாசின் கையில் விழாமல், நம்முடைய மனப்பான்மையை, கிரியைகளை கவனித்து, நிச்சயமான காரியங்களை தியானித்தால் கர்த்தர் நமக்கு துணையாக அரணாக நிற்பார் என்பதுறுதி, நாம் அப்படிச் செய்வோம் தனிமையை வெல்வோம், தேவ ஆசீர்வாதம் பெறுவோம். ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்**

**புதிய ஏற்பாட்டின் அமைப்பு**

| | | |
|---|---|---|
| 1.மத்தேயு - யோவான் | : | கிறிஸ்துஇயேசுவாழ்ந்ததுஎப்படி? |
| 2.அப்போஸ்தலர்நடபடிகள் | : | கிறிஸ்தவனாகமாறுவதுஎப்படி? |
| 3.ரோமர் - யூதா | : | கிறிஸ்தவனாகவாழ்வதுஎப்படி? |
| 4.வெளிப்படுத்தினவிசேஷம் | : | கிறிஸ்தவனாகவாழ்ந்தால்கிடைப்பதுஎன்ன? |

சிறுவர் பகுதி

# இயேசுவின் சிலுவைப்பாடுகளும் மரணமும்


எனக்கு மிகவும் பிரியமான அன்பு தம்பி தங்கைகளே, உங்களை நமக்காக பாடுகள் பட்டு, மரித்து, மூன்றாம் நாள் உயிரோடெழுந்த நமதாண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இம்மாதமும் இக்கட்டுரையின் வாயிலாக உங்களை சந்திக்கும் சிலாக்கியத்தைத் தந்த பரலோக தந்தைக்கு நன்றிகளை செலுத்துகிறேன். இம்மாதம் நாம் நமது ஆண்டவரின் பாடுகளையும், அவரின் மரணத்தையும் பற்றி சிந்தித்து, அவரின் அன்பை ருசிபார்க்க போகிறோம்.



இயேசுவானவர், நமக்காக மிகக் கொடுமையான பாடுகளை சகித்தார். அவர் சிலுவைக்கு போவதற்கு முன் சாட்டையினால், அல்லது வாரினால் அடிக்கப்பட்டார். ரோமர்கள் அடிப்பதற்காக வைத்திருக்கும் வார், நீளத்தில் சின்னதாகவும், அந்த சாட்டையில் அநேக வார்கள் இணைக்கப்பட்டும் ஒவ்வொரு வாரின் முனையிலும், கூர்மையான கண்ணாடித் துண்டோ, கூர்மையாக்கப்பட்ட ஆட்டின் எலும்போ சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும். என தருமை தம்பி, தங்கச்சி, அப்படியே நீ நினைத்துப்பார், நமது இயேசு ஆண்டவரை அந்த வாரினால் ஓங்கி, ஓங்கி மார்பிலும், முதுகிலும், காலிலும் அடிக்கும் போது அது அவரது சதையை எப்படி பிய்த்திருக்கும் என்று. அவருடைய முதுகு உழப்பட்ட நிலத்தைப் போல ஒரே காயமாக இரத்தம் சொட்டிக்கொண்டே இருந்திருக்கும் அல்லவா!

இயேசுவின் தலையில் ஒரு இஞ்ச் நீளமுள்ள முள்முடியை சூடினார்கள், அது மாத்திரமா அதின்மீது ரோம போர் சேவகர்கள் தங்கள் தடியினால் ஓங்கி அடித்த வேளையில், அந்த முள் கீரிடம் இயேசுவின் தலைக்குள் பாய்ந்திருக்கும். அய்யோ எத்தனை வேதனையை நமக்காக சகித்தார் ! இயேசுவானவர், தனது சிலுவையை சுமந்து கொண்டு

கொல்கொதா என்னும் இடத்திற்கு புறப்பட்டார். அவருக்கு தூக்கமேயில்லை, அவர் அடிக்கப்பட்டார், வாரினால் அவரை அடித்தார்கள். ஆகவே அந்த பாரச் சிலுவையை கொஞ்ச தூரம் தூக்கிச் சென்றவர் பின்பு முடியாமல் கீழே விழுந்தார். அவருக்கு பதிலாக சிரேனே ஊர் சிமோனை அச்சிலுவையை சுமக்கும்படி பலவந்தப்படுத்தினார்கள். இயேசு கொல்கொதா என்னும் இடத்திற்கு வந்து சேர்ந்தபோது, இரக்கமில்லாமல் அவரின் பின்புறம் சிலுவையின் மேல் படுமாறு அவரை அதில் தள்ளி படுக்க வைத்தார்கள். ஏற்கனவே ரனகளமாகயிருக்கும் அவர்தம் முதுகு இப்பொழுது இழைக்கப்படாத மரத்தில் சாய்ந்தது. அய்யோ எத்தனை வேதனைப்பட்டார் நம்மை மீட்க.



அவருடைய கைகளை நீட்டி அதில் மிகவும் பெரிய ஆணிகளை அடித்தார்கள். கால்கள் இரண்டையும் ஒன்று சேர்த்து ஒரே ஆணியை வைத்து அடித்தார்கள். பின்பு அந்த சிலுவையைத் தூக்கி, அங்கே தோண்டப்பட்டிருக்கும் குழியொன்றில் தடாலலென இரக்கி அதை அக்குழியில் நிறுத்தினார்கள். அவர், அச்சிலுவையில் மிகவும் துன்பத்தை சகித்திருப்பார். கைகளிலும், கால்களிலும் வலி, அவருடைய முதுகின் காயங்கள் கூர்மையான பகுதிகளைக் கொண்ட சிலுவை மரத்தில் உரசும் போது ஏற்படும் வலி, அவரால் மூச்சுவிட முடியாமல், தன்னை முழுவதும் மேலாக தூக்குவதற்காக காலை சிலுவையில் ஊன்றி தன்னை தூக்கும் போது அய்யோ எத்தனைபாடு. இந்தப்பாடுகள் அநேக மணி நேரம் நீடித்தது, ஆனாலும், அவர் சொன்னார், “பிதாவே இவர்களை மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே” என்று. (லூக்கா 23:34)

இயேசுவின் சிலுவை உங்களுக்கும் எனக்கும் என்ன அர்த்தத்தை தருகிறது? இயேசு மரிக்காதிருந்தால், தேவன் நமது பாவத்தை மன்னித்திருக்கமாட்டார். பாவத்திற்கான நிவாரணம் இருந்திருக்காது. வேறு எந்த பலியும் இவ்வேளையை செய்து முடித்திருக்காது. மிருக இரத்தம் இதற்கு போதுமானதல்ல (எபி 10:4) வேறு எந்த பலியும் நமது பாவத்தை நீக்கியிருக்காது (எரேமியா 7:31; மீகா 6:7) மனித உருவாய் வந்த தேவ

குமாரனின் இரத்தமே, நமது பாவங்களை நீக்கி சுத்திகரிக்கும் வல்லமை வாய்ந்ததாக இருக்கிறது. எனக்கன்பான சிறு தம்பிகளே! தங்கைகளே! இயேசுவானவர் நமது பாவங்களுக்கான பலியை செலுத்தியதால், நாம் மன்னிப்பை பெற முடியும். இது தான் தேவ கிருபை! சிலுவை நமக்கு தேவ அன்பை வெளிப்படுத்துகிறது (யோவான் 3:16) நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (ரோமர் 5:8) இயேசு எல்லாருக்காகவும் மரித்தார் (எபிரெ 2:9: 1யோவான் 2:2) ஆனால் எல்லாரும் இரட்சிக்கப்படமாட்டார்கள் (மத்தேயு 7:14). வேறுபாட்டை எது உண்டாக்குகிறது. நாம் அவரை விசுவாசித்து, மனந்திரும்பி, அவர் தேவ குமாரன் என்று அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறுவதின் மூலமாக அவருடைய இரத்தத்தோடு தொடர்பு ஏற்படுத்த வேண்டும். (மாற்கு 16:16; அப். 2:38; 22:16; ரோமர் 10:10)

இயேசு எப்படி சிலுவையில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தாரோ அதே போல நாமும் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கும்போது, "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம்பண்ணப்பட்டோம்" (ரோமர் 6:4) தேவன் அருளிய சொல்லி முடியாத இந்த ஈவை (2 கொரி 9:15) நாம் இந்த சிறுபிராயத்திலிருந்தே அறிந்து வைத்துக்கொள்ளுவது தேவனுக்கு மிகவும் பிரியமான காரியமாகும்; ஆகவே நாமனைவரும் இதை செய்ய முயற்சி மேற்கொள்வோம். ஆமென் !

R. Abel Rodger Nayagam

**<u>தாவீது ஜெபம் செய்த காரியங்கள்</u>**

**சங்கீதம் 19:12-14**

1. *மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும் (12)*
2. *துணிகரமான பாவங்களுக்கு விலக்கிக்காரும் (13)*
3. *அவைகள் என்னை ஆண்டு கொள்ள ஒட்டாதிரும் (13)*
4. *உத்தமனாக்கும் (13)*
5. *பெரும்பாதகத்துக்கு நீங்கலாக்கும் (13)*
6. *என் வாயின் வார்த்தைகளும் (14)*
7. *என் இருதயத்தில் தியானமும், உம் சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக (14)*

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கடந்த மாதத்தில், ஆத்துமாவை சுத்திகரிக்கும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் தான், பாவத்திலிருந்து மன்னிப்புப் பெற்று மீட்கப்பட முடியும் என்று கற்றுக்கொண்டோம். இயேசுவில் வைக்கும் விசுவாசதத்தின் மூலமே, நாம் நீதிமான்களென்று தீர்க்கப்படமுடியும். ஆனால், யாக்கோபு 2:14-26-ன்படி, நாம் நீதிமான்களென்றோ அல்லது குற்றமற்றவர் என்றோ தீர்க்கப்பட வேண்டுமானால், நாம் ஜீவிக்கின்ற, செயல்படுகின்ற, கீழ்ப்படிதலுள்ள விசுவாசம் உடையவர்களாயிருக்க வேண்டும். விசுவாசம் மாத்திரம் போதுமானதல்ல

இப்பொழுது, நம்முடைய பாவங்கள் நீக்கப்படுவதற்கும், நாம் இரட்சிப்படைவதற்கும், இயேசுவோடு நாம் நெருக்கமான தொடர்பு கொண்டிருப்பதற்கும், நம்முடைய விசுவாசம் எப்படிக் காரணமாயிருக்கிரதென்று வேத வசனங்களைக் கொண்டு தீர்மானிக்க விரும்புகிறோம்.

தயவு செய்து, லூக்கா 19:10-ஐ வாசிக்கவும். இங்கே, நாம் பாவத்திலே இழந்து போனவர்களாய் இருக்கிறபடியால், இயேசு இழந்து போனதை தேடவும், இரட்சிக்கவும் வந்தார் என்று பார்க்கிறோம். மத் 1:21-ஐ வாசிக்கவும். இயேசு ஜனங்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிப்பார் என்று கர்த்தருடைய தூதன் சொன்னார்.

ஆகவே, நாம் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென்று, இயேசு தம்முடைய புதிய ஏற்பாட்டில் எழுதிக் கொடுத்திருக்கிறார் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

உண்மையில், மீட்பர் பரலோகத்திற்கு ஏறிப்போவதற்குக் கொஞ்சம் முன்னதாக, பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுவதற்கு, என்ன பிரசங்கிக்க வேண்டுமென்று தம்முடைய அப்போஸ்தலருக்குச் சொன்னார். "அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்க ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள்

கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்" (மத். 28:18-20) "பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்". (மாற் 16:15,16) மற்றும் "அன்றியும் மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது, நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள், என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்". (லூக் 24:47-49) நித்திய காலத்திற்கும் முக்கியமாயிருக்கக்கூடிய நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென்பதற்கு இயேசு என்ன சொன்னார் என்று இவ்வசனங்களைக் கொண்டு கீழே ஓர் அட்டவணை தயாரித்துள்ளோம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மத்தேயு 28:18,19 | புறப்பட்டுப் போய் சகல தேசத்தாருக்கும் போதியுங்கள் | | | ஞானஸ் நானம் கொடுத்து | நான் உங்களுக்குக் கட்டளை யிட்ட யாவையும் கைக்கொள்ள உபதேசம் பண்ணுங்கள் | |
| மாற்கு 16:15,16 | உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் | விசுவாசமுள்ள வனாகி | | ஞானஸ் நானம் பெற்றவன் | இரட்சிக்கப் படுவான் | |
| லூக்கா 24:47-49 | எருசலேம் தொடங்கி சகல தேசத் தாருக்கும் | | மனந் திரும்புதல் | | பாவ மன்னிப்பு | |
| எல்லா வசனங் களையும் தொகுத் தால் | எல்லோருக்கும் சுவிசேஷத்தை போதித்துப் பிரசங்கிக்க வேண்டும் | விசு வாசம் | மனந் திரும்புதல் | ஞானஸ் நானம் | பாவ மன்னிப்பு இரட்சிப்பு | தொடர்ந்து உபதேசம் |

மத் 10:32,33 வாசிக்கவும். இவ்வசனத்தில், பரலோகத்திலிருக்கிற தம்முடைய பிதாவுக்கு முன்பாக, அவர் நம்மை அறிக்கையிட வேண்டுமென்றால், மனுஷருக்கு முன்பாக அவர்மேல் நாம் வைத்திருக்கும் நம்பிக்கையை அறிக்கை செய்ய வேண்டுமென்று கூறியுள்ளார்.

ஆகையால், நாம் பாவமன்னிப்பு பெற்று இரட்சிக்கப்பட வேண்டுமானால், நாம் விசுவாசித்து, மனந்திரும்பி, அவர்மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கை செய்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று நம்முடைய அன்பான இரட்சகர் கூறியுள்ளார். கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருந்திருந்தால், இரட்சிப்பு சம்பந்தமாக, அவர்கள் அதே விதமான செய்தியைத்தான் பிரசங்கித்திருப்பார்களென்று நாம் எதிர்பார்க்கலாம். அந்த அப்போஸ்தலரும், மற்றவர்களும் என்ன பிரசங்கித்தார்களென்பது, புதிய ஏற்பாட்டின் சரித்திரப் புத்தகமாகிய, அப்போஸ்தலர் நடபடிகளில் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது.

நித்திய காலத்திற்கும் முக்கியமானதாக இருக்கக்கூடிய இக்காரியம் குறித்து அவர்கள் போதித்தவைகளின் தொகுப்பு என்ன என்பதை தயவு செய்து கவனமாய்ப் பாருங்கள்.

| அப்போஸ்தலர் 2:37-41,47 | பெந்தெகொஸ்தே நாள் | | மனந்திரும்பு | | ஞானஸ்நானம் பெற்றார்கள் | பாவ மன்னிப்பு |
|---|---|---|---|---|---|---|
| 8:12 | சமாரியர்கள் | விசுவாசித்தார்கள் | | | ஞானஸ்நானம் பெற்றார்கள் | |
| 8:13 | சீமோன் | விசுவாசித்தான் | | | ஞானஸ்நானம் பெற்றான் | |
| 8:35-39 | எத்தியோப்பிய மந்திரி | விசுவாசித்தான் | | அறிக்கை செய்தான் | ஞானஸ்நானம் பெற்றான் | சந்தோஷமடைந்தான் |
| 10:2, 44-48 11:14 | கொர்நெலியு | விசுவாசித்தான் | | | ஞானஸ்நானம் பெற்றான் | இரட்சிக்கப்பட்டான் |
| 16:14,15 | லீதியாள் | | | | ஞானஸ்நானம் பெற்றாள் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16:30-34 | பிலிப்பிய ஜெயில் அதிகாரி | விசுவாசித்தான் | | | ஞானஸ்நானம் பெற்றாள் | மன மகிழ்ச்சியடைந்தான் |
| 18:8 | கொரிந்தியர்கள் | விசுவாசித்தார்கள் | | | ஞானஸ்நானம் பெற்றார்கள் | இரட்சிப்படைந்தனர் (1கொரி 15:1.2) |
| 19:1-5 | எபேசியர்கள் | விசுவாசித்தனர் | மனந்திரும்பு | | ஞானஸ்நானம் பெற்றனர் | மீட்கப்பட்டனர் மன்னிப்படைந்தனர் (எபே 1:7 |
| 22:16 | பவுல் | | | | ஞானஸ்நானம் பெற்றான் | பாவங்கள் கழுவப்பட்டது |
| இவ்வசனங்களின் தொகுப்பு | | விசுவாசம் | மனந்திரும்புதல் | கிறிஸ்துவை அறிக்கையிடுதல் | ஞானஸ்நானம் | பாவ மன்னிப்பு, சந்தோஷம் இரட்சிப்பு, மீட்கப்படுதல் மற்றும் பாவ மன்னிப்படைதல், பாவங்கள் கழுவப்படுதல் |

அப்போஸ்தலரில் உள்ள மனமாற்றச் சம்பவங்கள் அனைத்தையும் நாம் தொகுத்துப் பார்த்தால், நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிப்படைய இயேசு என்ன போதித்தாரோ, அதை அப்படியே இயேசுவின் அப்போஸ்தலரும், மற்றவர்களும் போதித்துள்ளனர் என்று நாம் காண முடியும்! மேலே கொடுக்கப்பட்டுள்ள வேத வசனங்களையும், மேலே உள்ள அட்டவணையையும் நீங்கள் கவனித்தால், குறிப்பிட்ட ஒன்று, அப்போஸ்தலரில் உள்ள எல்லா மனமாற்றச் சம்பவங்களிலிருந்தும்

இடம் பெற்றிருப்பதைக் காணலாம். ஆம், அந்த ஒன்று **"ஞானஸ்நானம்"**

இருப்பினும், இன்றைக்கு இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிறவர்கள், பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட அந்த குறிப்பிட்ட ஒன்று முக்கியமில்லை என்று சொல்லுகின்றனர். ஆமாம், ஞானஸ்நானம் அவசியம் என்பதை மறுக்கின்றனர். இது மிகவும் துக்கமானது இந்த மனமாற்றச் சம்பவங்கள் பட்டியலில், தேவன் ஞானஸ்நானத்தை எதோடு தொடர்புபடுத்தியிருக்கிறார் என்பதைப் பார்க்கும் போது, அநேகரின் இந்தத் தவறான எண்ணம் துக்கமாக உள்ளது. வேத வசனங்களிலிருந்தும், இந்த அட்டவணையிலிருந்தும், தேவன், ஞானஸ்நானத்தை, பாவமன்னிப்பு, சந்தோஷம், இரட்சிக்கப்படுதல், மீட்பு, மன்னிப்பு, பாவங்கள் கழுவப்படுதல் ஆகியவைகளோடு சம்பந்தப்படுத்தி யிருக்கிறார். காரியங்கள் இப்படித் தெளிவாக இருக்கும் போது, ஒருவன் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பே இரட்சிக்கப்படுகிறான் என்றும், இரட்சிக்கப்படுவதற்கு ஞானஸ்நானம் அவசியமில்லையென்றும் மனிதர்கள் எப்படிச் சொல்ல முடியும்?

ஞானஸ்நானம் முக்கியம் என்பது சம்பந்தமாக, அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் மாத்திரம் முடிவானது அல்ல! புதிய ஏற்பாட்டின் மற்ற பகுதிகளிலும், ஞானஸ்நானம் பற்றி தேவன் என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள்.

தயவு செய்து ரோமர் 6:3,4 வாசிக்கவும். இவ்வசனங்களில், ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறான் என்ற தேவன் தெளிவுபடுத்துகிறார். கிறிஸ்துவுக்குள்ளாக ஒருவன் வருவதற்கு ஞானஸ்நானம் **ஒன்றுதான்** வழி நாம் முன்னமே படித்தது போல், கிறிஸ்துவுக்குள், சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் இருக்கிறபடியால், ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாக இருக்க வேண்டியது, நித்திய காலத்திற்கும் முக்கியமான ஒன்று. ஆவிக்குரிய ஆசீவாதங்களில், மீட்பு, பாவமன்னிப்பு, இரட்சிப்பு, நித்திய மகிமை (எபே 1:3,7 IIதீமோ 2:1) ஆகியவையும் அடக்கம்.

ரோம 6:3-ல் இயேசுவின் மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறோம் என்றும் கற்கிறோம். ஏன் அது அவ்வளவு முக்கியம்? ஏனெனில், இயேசு தம்முடைய இரத்தத்தை மரணத்திலே சிந்தினார். நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை கழுவி, சுத்திகரிக்கும் வல்லமை அவருடைய இரத்தத்திற்கு மாத்திரமே உண்டு.

ரோமர் 6:4ல், வேதாகம ஞானஸ்நானம் தண்ணீருக்குள்ளான அடக்கம் என்று சொல்லுகிறது. ஆகவே, இயேசு கட்டளையிட்ட ஞானஸ்நானம் தண்ணீருக்குள் முழுகுதல் தானேயொழிய, மற்றபடி ஊற்றுதலோ, தெளித்தலோ அல்ல! அத்தோடு, ஒருவன் முறையாக ஞானஸ்நானம் பெற்றதற்கு பிறகு, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி எழுப்பப்படுகிறான் என்று பார்க்கிறோம். அப்படியானால், இதன் பொருள், தங்களுடைய கடந்த காலப் பாவங்களுக்காக, தண்ணீருக்குள்ளாக முழுகும்போது, ஆவிக்குரிய ரீதியில் அவன் மறுபடியும் பிறக்கிறான் என்பதாகும். II கொரி 5:17 வசனத்தின்படி "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் **புது சிருஷ்டியாயிருக்கிறான்**" என்று தேவன் சொல்லுகிறார். அவருக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவதன் மூலம், அவருக்குள்ளாக முடியும்! ஆகவே, II கொரிந்தியர் 5:17-ம் வசனம் ரோமர் 6:3,4 வசனப்பகுதியோடு முற்றிலும் ஒத்துப்போகிறதாகவே உள்ளது!

ஞானஸ்நானம் குறித்து, தேவன் தமது வசனங்களிலிருந்து சொல்லுவதற்கு இன்னும் நிறைய இருக்கிறதென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும் கர்த்தருக்குச் சித்தமானால், அடுத்த மாதம் பார்ப்போம்.

உங்களுடைய கடந்த காலப் பாவங்களுக்காக தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறுவதன் மூலம் நீங்கள் இயேசுவுக்குள் வராமலிருந்தால், நீங்கள் உடனடியாக அப்படிச் செய்து, கர்த்தருக்குக் கீழ்ப்படிய முன்வரமாட்டீர்களா?

**EZSR** **CHARLIE DI PALMA**

## கடல் நடுவே நீரூற்று

**யோபு**விடம் தேவன் இப்படிக் கேட்கிறார். "நீ சமுத்திரத்தின் அடித்தலங்கள் மட்டும் புகுந்து, ஆழத்தின் அடியில் **(Springs)** உலாவினதுண்டோ? (38:16) என்று. உண்மையாகவே கடலுக்கடியில் நீரூற்று உண்டா? ஆம் ! இதை முதன்முதலில் கண்டு பிடித்தவர் ரோமப்புவியியலாளர் ஸ்ட்ராபோ **(63BC - 21AD)** என்பர். 1976ல் அமெரிக்க பூமியியல் ஆராய்ச்சியாளர்கள், அட்லாண்டிக் கடலோரத்தில், நியூ இங்கிலாந்திலிருந்து - ஜார்ஜியா வரை நல்ல தண்ணீர் உள்ளதாகக் கண்டுபிடித்துள்ளனர்.

# நீதிமானுக்கு வரும் துன்பங்கள்

நம்மில் அநேகருக்கு எழும்புகின்ற கேள்வியை தேவனிடம் எரேமியா இப்படியாகக் கேட்கின்றார்.... ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன? துரோகஞ் செய்து வருகிற அனைவரும் சுகித்திருக்கிறதென்ன? (எரே 12:1) உண்மை கிறிஸ்தவர்களுக்கு ஏன் துன்பங்கள் என்ற கேள்விக்கு விடையை வேதாகமத்தில் காண்போம் வாருங்கள்.

முதலாவதாக நம்முடைய விசுவாசத்தின் மூலமாக தேவன் மாற்றவர்களை உற்சாகப்படுத்துகின்றார்: நாம் பல துன்பங்கள் வழியாக தேவனுடைய சபையில் நிலைத்திருக்கும் பட்சத்தில் அது மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமைய தேவன் வழி செய்கின்றார். இதை நாம் உணராமல் எனக்கு மட்டும் ஏன் இந்த துன்பம் என்று புலம்புகின்றோம். விஞ்ஞானிகள் புதிய மருந்துகளை கண்டுபிடிக்க சிலசிறு பிராணிகளை பயன் படுத்துகிறார்கள். பின்பு அது பலகோடி ஜனங்களின் உயிர்காக்கும் மருந்தாக பயன்படுகிறது அதுபோல துன்பங்களும் நம் பிரயோஜனத்திற்காக பயன்படுத்துகிறார் (ரோம 8:28) ஆபிரகாம் தன் நேசக்குமாரனை பலியிட முன்வந்தபோது அது எவ்வளவு இதய வலியை அவனுக்குக் கொடுத்திருக்கும்? அவனுடைய அந்த அனுபவமே நம் விசுவாசத்தை தட்டியெழுப்பும் மாதிரியாக பல ஆயிரம் வருஷம் கடந்தும் பேசப்பட்டு வருகிறது.

இரண்டாவதாக பின் நாட்களில் செய்யப்போகும் நன்மைக்காக தேவன் நம்மை சிறுமைப்படுத்துகிறார் (உபா 8:15) தற்கால துன்பங்கள் நமக்கு பெரிதாகத் தோன்றினாலும் எல்லாவற்றையும் முன் கூட்டியே அறிந்த தேவனானவர் அதை நம் வாழ்வில் அனுமதிக்கிறார். அப்போதுதான் நாம் பிறருக்கு ஆறுதல் சொல்லும் தகுதியை பெறமுடியும் மற்றவர் கஷ்டங்களை புரிந்து கொள்ள முடியும் ராணுவத்தில் உயர் அதிகாரியாக ஒருவர் வரவேண்டுமானால் பல இன்னல்களை அவர் சந்தித்து இருக்க வேண்டும். அதுபோல நாமும் இவ்வுலக வாழ்வில் போராடி தான் தேவனுடைய பிள்ளை என்ற தகுதியை காப்பாற்றிக் கொள்ள முடியும்.


மூன்றாவதாக நம் தேவனை நாம் மறந்து போகாமல் தொடர்ந்து நினைவில் வைக்கவும் துன்பங்கள் துணை செய்கின்றன (உபா 8:16-18) அநேகர் தங்கள் ஐசுவரியம் பெருகும் போது தேவனை மறந்து மேட்டிமை

சிந்தையாக மாறிவிடுகின்றனர். பொதுவாக மனிதர்கள் மறதிகுணம் படைத்தவர்கள். ஆனால் நம் தேவனோ நம் தாய் மறந்தாலும் நம்மை மறவாத உன்னதமான தேவன். நம் மறதி குணத்தினால் தான் பழைய ஏற்பாட்டில் ஓய்வு நாளையும் புதிய ஏற்பாட்டில் வாரத்தின் முதல் நாளையும் நாம் கைக் கொள்ள வைத்திருக்கிறார். பழைய ஏற்பாட்டில் ஓய்வு நாளில் விறகு பொறுக்கிய நபரை கல்லெறிந்து கொன்றார்கள். புதிய ஏற்பாட்டில் அப்படி இல்லாவிட்டாலும் ஒரு நாளைக் கைக்கொள்ளும் விஷயத்தில் தேவனுடைய கண்டிப்பை நாம் உணர்ந்து சபை கூடி வருதலை விட்டு விடாமல் கைக்கொள்வோமாக (எபி 10:25) எனவே துன்பங்கள் மற்றும் வறுமையே நம் தேவனை தியானிக்க உதவுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

நான்காவதாக நாம் பொறுமையுள்ளவர்களாக மாற அவைகள் பெரிதும் உதவுகின்றன. (யாக் 1:2-4) பொறுமை கடலினும் பெரிது என்பார்கள். காரணம் பொறுமையின் விலையை அநேகர் உணருவதால் தான் அப்படி சொல்கிறார்கள். பொறுமை எப்படி பெறுவது என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் தேவனுடைய வார்த்தையே அதற்கு தீர்வு சொல்கிறது. நாம் தேவன் மேல் வைக்கும் விசுவாசம் ஆட்டம் காணும் அளவு பரீட்சைகள் நமக்கு நேரிடும் போது நாம் உறுதியாய் இருப்பதின் மூலம் உள்ளான மனுஷனில் வளருகிறோம் (2 கொரி 4:16) இதே காரணத்தினால் பவுலும் தம் உபத்திரங்களைக் குறித்து மேன்மை பாராட்டுகிறார் (ரோம 5:3,4) மிக முக்கியமாக நாம் நம்மைக் குறித்து மிஞ்சி எண்ணாமல் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்கவும் (ரோம 12:3) அவை நமக்கு உதவுகின்றன. அப்படி யாரெல்லாம் தங்களைக் குறித்து மிஞ்சி எண்ணுகிறார்களோ அவர்கள் பரீட்சைக்கு நில்லாதவர்கள் என வேதம் வெளிச்சம் போட்டு காண்பிக்கிறது.

தேவனுடைய பிள்ளையே நம்மிடம் பொறுமையும், விசுவாசத்தில் தைரியத்தையும் உண்டாக்கவே தேவன் தாமதிக்கிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். சங் 13ல் எதுவரைக்கும் தாமதிப்பீர் என்று ஆரம்பித்து அதன் முடிவில் நன்மை செய்தபடியால் பாடுவேன் என்று தாவீது சொல்கிறார் தாமதியாதேயும் என்று ஜெபிக்கவும் அவர் கற்று தருகிறார் சங் 40:17 ஆண்டவர் இயேசு லாசருவின் மரண வியாதியில் உடனே செல்லாமல் தாமதம் செய்தது (யோவா 11:6) தேவனுடைய மகிமை வெளிப்படவே என்று காண்கிறோம். நாமும் சோர்ந்து போகாமல் உதவி வரும் கன்மலை நோக்கி பார்த்திடுவோம். ஆண்டவர் இயேசுவின் கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக ஆமென்

**Bro. K. Pandian**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sansrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K.Varghese |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription Rs.30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

## பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

# ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட


ஓர் இலவச பயிற்சி.

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம்.
தமிழ்நாடு. இந்தியா.

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேரூரை ஆற்றுகிறார்.



**ராஜ் டிவி** யில்

**திருமறை தியானம்**

பிரதி புதன்கிழமை காலை 6.05 to 6.20 மணி

**தமிழன் டிவி** யில்

**திருமறை தியானம்**

பிரதி சனிக்கிழமை காலை 7.15 to 7.30 மணி




Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor. S. Rajanayagam.